**Source:** *Tamil Murasu,* p4
**Date:** 17 August 2017

# உயர் நீதிமன்றத்துக்கு மேலும் நான்கு நீதிபதிகள் நியமனம்



பிரதமர் லீ சியன் லூங்கின் ஆலோசனையின்படி, உயர் நீதிமன்றத்துக்கு மேலும் நான்கு நீதிபதிகளை அதிபர் டோனி டான் கெங் யாம் நியமித்துள்ளார் என்று பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

அவர்கள் (படத்தில் இடமிருந்து) வெலரி தியன் பிக் யுவென், ஹூ ஷியூ பெங், டெபி ஓங் சியூ லிங், எடிட் அப்துல்லா ஆகியோரே அந்த நான்கு நீதிபதிகள்.

இவர்களையும் சேர்த்து தற்போது உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி, மேல் முறையீட்டு நிதிபதிகள் ஐவர், நீதித்துறை ஆணையாளர்கள் நால்வர், மூத்த நீதிபதிகள் ஐவர், அனைத்துலக நீதிபதிகள் 12 பேர் என மொத்தம் 22 நீதிபதிகள் உள்ளனர்.

நீதித்துறை ஆணையாளர் வெலரி தியன் நீதிமன்றங்கள், தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகம், சட்ட அமைச்சு ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார். 2014 செப்டம்பர் 30ஆம் தேதி முதல் உச்ச நீதிமன்றத்தின் நீதித்துறை ஆணையாளராகப் பணியாற்றி வருகிறார்.

20 ஆண்டு சட்டத்துறை அனுபவமுடைய திருவாட்டி ஹூ, உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கிய முதல் பெண் நீதிபதி என்ற பெருமையைப் பெற்றவர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை இணைப் பேராசிரியராக இருந்த திருவாட்டி ஓங், 2014 நவம்பரில் நீதித்துறை ஆணையாளரானார். திரு எடிட், சிவில், குற்றவியல் விவகாரங்கள் முதல் சிக்கலான நிதி வழக்குகளையும் கையாண்டுள்ளார். இவர்களின் பதவிகாலம் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதியன்று தொடங்கும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.